**செய்தி வெளியீடு எண்: 181** **நாள் : 1 .04.2016**

**உரிய ஆவணங்கள் இல்லாமல் வாகனத்தில் கொண்டு சென்ற 11,467 ஸ்கூல் பேக்குகள், 16 கிலோ வெள்ளி நகைகள் – இதுவரை ரூ.16.98கோடி பறிமுதல்**

தேர்தல் நடைமுறைகளையொட்டி, தமிழ்நாட்டில் தேர்தல் விதிகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. தேர்தல் பறக்கும் படையும், நிலையான கண்காணிப்புக்குழுவும் மாவட்டங்களில் சோதனை செய்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகிறார்கள்.

01.04.2016 வரையில் பொது சொத்தில் சுவர் விளம்பரம், போஸ்டர், பேனர் கட்டி சேதம் ஏற்படுத்தியதாக மொத்தம் 3,436 வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது. மேலும் தனியார் சுவர்களில் விளம்பரம் செய்ததாக 983 வழக்குகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான பறக்கும்படை 30.03.16 அன்று வாகன சோதனை மேற்கொண்டபோது, உரிய அனுமதியோ, ஆவணங்களோ இல்லாமல் வாகனம் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் கொண்டு சென்ற ரூ.2.43 லட்சம், தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.1.03 லட்சம், திருவாரூர் மாவட்டத்தில் ரூ.2.86 லட்சம், தூத்துக்குடியில் ரூ.5.02 லட்சம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் 11,467 ஸ்கூல் பேக்குகள் உட்பட ரொக்கம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த ஒரு நாள் மட்டும் ரூ.11,98,685/– ரொக்கம் கைப்பற்றப்பட்டதால், இதுவரை ரூ.7,63,70,580/– ரொக்கம் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நிலையான கண்காணிப்புக்குழு (SST) சோதனை மேற்கொண்டபோது, மதுரை மாவட்டத்தில் 16.850 கிலோ வெள்ளி நகைகள், கிருஷ்ணகிரியில் ரூ.2.50 லட்சம், திருவாரூரில் ரூ.18.64 லட்சம் என மொத்தம் ரூ.21,94,000/– ரொக்கமாக 30.3.2016 அன்று கைப்பற்றப்பட்டது. இதுவரை மொத்தம் 9,33,85,210/– ரொக்கமாக இக்குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் விதிகள் மீறி சுவர்களில் கட்சி விளம்பரம் செய்தது, போஸ்டர், பேனர், கட்சி கொடிகளை அகற்றாதது, ஒரு கட்சியினரை வேறு ஒரு கட்சியினர் நாகரீகமற்ற வார்த்தைகளால் பேசி கட்சிகளுக்கும் விரோத மனப்பான்மையை உருவாக்கியது போன்ற காரணங்களால் கோவை, சென்னை, சேலம் ஆகிய மாவட்டங்களில் அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**